செய்தி வெளியீடு எண். 246 நாள்: 12.05.2018

**உணவு பாதுகாப்புத்துறையின் சார்பாக உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு மையத்தை மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் திறந்து வைத்து, விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் மற்றும் உணவு பாதுகாப்பு உரிமசான்றிதழ்களை வழங்கினர்**

உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறையின், ஆணையர் அவர்களின் உத்தரவின்படியும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின்படியும் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சுற்றுலாதலங்களில், கோடை காலங்களில் உணவு பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு பொது மக்கள், நுகர்வோர் மற்றும் உணவு வணிகர்களுக்கு உணவு பாதுகாப்பு துறையின் மூலம் உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு மைய துவக்க விழா திருத்தணியில் உள்ள அருள்மிகு திருத்தணி சுப்பிரமணியர் சுவாமி கோயில் வளாகத்தில் இன்று (12.05.2018) நடைபெற்றது.

உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு மைய துவக்க விழா மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது

இன்று மாநிலத்தில் 50 சுற்றுலா தளங்களில் உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு மையத்தை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கோடை காலங்களில் உணவு பாதுகாப்பு முறைகள், பாதுகாப்பான உணவு பற்றிய விழிப்புணர்வை பொது மக்களிடையை ஏற்படுத்தும் வகையில், கலப்பட உணவு பொருட்களை கண்டறிவதற்கான வழி முறைகளை தெரிந்து கொள்வதற்காகவும், கலப்பட உணவுப் பொருட்களை உட்கொள்வதால் மனிதனுக்கு ஏற்படும் தீமைகள் குறித்து விளக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு மையம் மே மாதம் முழுவதும் பொதுமக்கள் பார்வையிடும் வகையில் செயல்படவுள்ளது.

இந்த விழிப்புணர்வு மையத்தில் தெருவோர உணவு கடைகளில் கவனிக்க வேண்டியவை, உணவகங்களில் கவனிக்க வேண்டியவை, பழம், பழச்சாறு, குளிர்பானக் கடைகளில் கவனிக்க வேண்டியவை உணவு பொட்டலங்களில் விபரச் சீட்டில் கவனிக்க வேண்டிய விபரங்கள் அடங்கிய பலகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும், உணவில் கலப்படங்களை கண்டறிய மேற்கொள்ள வேண்டிய விரைவு சோதனைகள் குறித்தும் உணவுப்பாதுகாப்பு அலுவலர்களால் செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்படுகிறது.

மேலும் உணவின் தரம் குறித்த புகார்களை நுகர்வோர் தெரிவிக்கும் வகையில் வாட்ஸ்அப் எண் 9444042322 குறித்த போஸ்டர்கள் ஒட்டும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

பின்னர் உணவு வணிகர்கள் கடைபிடிக்க வேண்டிய உணவு பாதுகாப்பு விதிமுறைகளை விளக்கும் பதாகைகள் காய்கறி விற்பனையாளர், உணவு விடுதி உரிமையாளர் மற்றும் சில்லரை விற்பனையாளர்களுக்கும், உணவு பாதுகாப்பு உரிமசான்றிதழ்கள் திருத்தணி நகர உணவு வணிகர்களுக்கு வழங்கப்பட்டது. மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கோ.அரி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.பலராமன் (பொன்னேரி), திரு.பி.எம்.நரசிம்மன் (திருத்தணி) மற்றும் துறைச்சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**